# நாட்டிலேயே அதிக மொழிகள் பேசப்படும் மாவட்டம் பெங்களூரு

## ● 107 மொழிகள் பேசும் மக்கள் வாழ்வதாக ஆய்வில் தகவல்

இரா.வினோத்

பெங்களூரு

இந்தியாவில் அதிக மொழிகள் பேசப்படும் மாவட்டம் பெங்களூரு எனவும், அங்கு 107 மொழிகள் பேசும் மக்கள் வாழ்வதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ப்ரூக்கிங்ஸ் நிறுவனத்தை சேர்ந்த மூத்த ஆய்வாளர் ஷாமிகா ரவி, இந்திய புள்ளியியல் நிறுவனத்தில் பணியாற்றும் பேராசிரியர் முடித் கபூர் ஆகியோர் இணைந்து இந்தியாவில் அதிக மொழிகள் பேசப்படும் நகரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அதில், "2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாட்டில் அதிகமான மொழிகள் பேசப்படும் மாவட்டம் கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரு என தெரியவந்துள்ளது. அங்கு மொத்தமாக 107 மொழிகளை பேசும் மக்கள் வாழ்கின்றனர்.

இதில் 22 அட்டவணைப்படுத்தப் பட்ட மொழிகளை பேசும் மக்களும், 85 அட்டவணையில் இடம் பெறாத மொழிகளை பேசும் மக்களும் அடங்குவர். அதிகபட்சமாக கர்நாடக மாநில அலுவலக மொழியான கன்னடம் பேசப்படுகிறது.

பெங்களூருவில் 44.62 சதவீத மக்கள் கன்னடம் பேசுகின்றனர். தமிழ் (15%), தெலுங்கு (14%), உருது (12%), இந்தி (6%), மலையாளம் (3%), மராத்தி (2%), கொங்கனி (0.6%) உட்பட வேறுமொழிகளை சேர்ந்தவர்களும் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கின்றனர்.

பெங்களூருவுக்கு அடுத்த இடத்தில் நாகாலாந்தின் திமாபூர் மாவட்டத்தில் 103 மொழிகளும், அசாமின் சோனித்பூர் மாவட்டத்தில் 101 மொழிகளும் பேசப்படுகின்றன. குறைந்தபட்சமாக தமிழகத்தில் உள்ள அரியலூர் , புதுச்சேரியில் உள்ள ஏனாம் , உத்தரபிரதேசத்தில் உள்ள கான்பூர் தேஹத் உள்ளிட்ட மாவட்டங்களில் 20-க்கும் குறைவான மொழிகளே பேசப்படுகின்றன" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆய்வாளர் ஷாமிகா ரவி கூறும்போது, "பெங்களூருவில் அதிக மொழி பேசும் மக்கள் வாழ்வதற்கு வரலாறு, பருவநிலை மற்றும் பொருளாதார காரணங்கள் இருக்கின்றன. 1960-களில் பொதுத்துறை நிறுவனங்களும், 1990-களில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களும் தொடங்கப்பட்ட பின்னர் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மொழிகளை சேர்ந்த மக்கள் பெங்களூருவுக்கு இடம்பெயர்ந்தனர். இதனால் பெங்களூரு பன்மைத்துவம் பெற்ற நகரமாக மாறியது" என்றார்.

(C) KSL Media Ltd.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் தாய்லாந்து பிரதமர் வெற்றி

**பாங்காக், செப். 4:** தாய்லாந்து நாடாளுமன்றத்தில் பிரதமர் பிரயுத் சான்–ஓச்சா மீது சனிக்கிழமை கொண்டு வரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்தில் அவர் வெற்றி பெற்றார்.



பிரயுத் சான்–ஓச்சா

இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

தாய்லாத்தில் கரோனா விவகாரத்தை பிரதமர் பிரயுத் சான்–ஓச்சா சரியான முறையில் கையாளவில்லை என்று எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. இந்தச் சூழலில், அவரை பதவியிலிருந்து அகற்றுவதற்காக ஆளும் கூட்டணிக்குள்ளேயே முயற்சிகள் நடப்பதாக தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் பிரயுதுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சனிக்கிழமை கொண்டுவரப்பட்டது. இதில், தீர்மானத்துக்கு ஆதரவாக 208 வாக்குகளும் எதிராக 264 வாக்குகளும் பதிவாகின. இதையடுத்து, பிரயுத் சான்–ஓச்சாவின் பதவி தப்பியது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 22 சே.ப. நரசிம்மலு நாயுடு

காங்கிரஸின் தோற்றம் பற்றிய வரலாற்று நிகழ்வுகளை 'ஆரியர் திவ்விய தேச யாத்திரை' , 'தட்சண இந்திய சரித்திரம்' ஆகிய நூல்களில் ஆவணப்படுத்தியுள்ளார் சே.ப.நரசிம்மலு நாயுடு.



முதலாவது காங்கிரஸ் மாநாடு பம்பாயில் 1885–ஆம் ஆண்டு டிசம்பர் 27 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இந்நிகழ்வில் சென்னை மாகாணத்தின் சார்பில் 21 பிரதிநிதிகள் பங்கேற்றனர். அவர்களுள் ஒருவர் நரசிம்மலு நாயுடு. இந்தியா முழுவதிலும் இருந்து அந்த மாநாட்டில் 72 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அந்த மாநாட்டு ஏற்பாடுகள் குறித்தும் அதில் பங்கேற்ற பிற பகுதிப் பிரதிநிதிகள் பற்றியும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் நுட்பமான பல தகவல்களைப் பதிவு செய்துள்ளார் நாயுடு. பிற மாநிலங்களிலிருந்து வந்திருந்த முக்கியப் பிரதிநிதிகள் சிலரிடம் அந்த மாநாட்டிற்கு முன்பாகவே மிகுந்த நட்புடன் நாயுடு விளங்கியுள்ளமையை அவரது கட்டுரை வெளிப்படுத்துகிறது.

ஆங்கிலேயர் ஏ.ஓ. ஹ்யூம் அந்த மாநாட்டை வழிநடத்தியது பற்றியும் டபிள்யூ.சி. பானர்ஜியின் தலைமையுரை குறித்தும் தீர்மானங்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசியோர் சம்பந்தமாகவும் காட்சிப்படுத்தும் விதத்தில் பதிவு செய்துள்ளார். அதேபோன்று 1886–ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டிலும் பிரதிநிதியாகப் பங்கேற்றுள்ளார் நாயுடு.

'அந்தக் கட்டடத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஜனங்கள் வந்து கூடினார்கள். இந்த மூவாயிரம் ஜனங்களில் பற்பல விதமான உடுப்புக்காரர்களும், தொப்பிக்காரர்களும் , பாஷைக்காரர்களும், மீசைக்காரர்களும், ஜாதிக்காரர்களும், வேதக்காரர்களும் விதவிதமாகவும் வேடிக்கையாகவும் உடைகளைத் தரித்துக் கொண்டும் ' தேசாபிமானம்' எனும் பொது விஷயத்துக்காக அநேக ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வந்து கூடி தேவேந்திர சபையைப் போலிருந்த விநோதத்தை வர்ணிக்க கம்பநாட்டாழ்வார் ஜனித்து வந்தாலன்றி எம்மால் எழுத முடியாது' என்று உணர்ச்சி பொங்கப் பதிவு செய்துள்ளார்.

1887–இல் நடைபெற்ற சென்னை காங்கிரஸ் மாநாட்டிலும் பிரதிநிதியாகப் பங்கேற்றுள்ளார். பிரம்ம சமாஜக் கொள்கையில் தோய்ந்த நாயுடு சமூக சீர்திருத்தத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவராகவும் விளங்கியுள்ளார். ஆழத்தடம் பதித்த பத்திரிகையாளரான இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 'காங்கிரஸ் கீதம்' என்ற கொள்கை விளக்கக் கவிதைத் தொகுப்புநூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். பயண இலக்கியத்தின் முன்னோடி. இவரின் பயண அனுபவங்கள் கோவையில் காங்கிரஸ் விரிவாக்கத்திற்கு மட்டுமல்லாது பல தொழில் உருவாக்கத்திற்கும் அடித்தளமிட்டுள்ளன.

1889–இல் காங்கிரஸ் மாநாட்டு நினைவுகள் அவரது இதயத்தில் பசுமையாக இருந்த காலத்திலேயே அவற்றைப் பதிவுசெய்து புத்தகங்களாக வெளியிட்டு வரலாற்றுக்கு வளம் சேர்த்துள்ளார் சே.ப.நரசிம்மலு நாயுடு.

**த.ஸ்டாலின் குணசேகரன்.**

# பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க வேட்டை

## ஒரே நாளில் 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்





தங்கப் பதக்கம் வென்ற (இடமிருந்து) மணீஷ் நர்வால், பிரமோத் பகத்.

**டோக்கியோ, செப். 4:** டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் சனிக்கிழமை ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

இதையடுத்து இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 17-ஆக அதிகரித்துள்ளது. இதில் 4 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலம் ஆகியவை அடங்கும்.

இந்திய போட்டியாளர்களுக்கு சனிக்கிழமை, துப்பாக்கி சுடுதலில் ஒரு தங்கம், ஒரு வெள்ளியும், பாட்மிண்டனில் ஒரு தங்கம், ஒரு வெண்கலமும் கிடைத்துள்ளது.

**துப்பாக்கி சுடுதல்:** துப்பாக்கி சுடுதலில் பி4 கலப்பு 50 மீட்டர் பிஸ்டல் எஸ்ஹெச்1 பிரிவில் இந்தியாவின் மணீஷ் நர்வால் (19) முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். அதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான சிங்ராஜ் அதானா (39) இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி வென்றார். இதில் நர்வால் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளார். அதானா, இதே பாராலிம்பிக்கில் ஏற்கெனவே 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ்ஹெச்1-இல் வெண்கலம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**பாட்மிண்டன்:** பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவர் ஒற்றையர் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சர்கார் (31) வெண்கலமும் வென்றனர். இருவருக்குமே இது முதல் பாராலிம்பிக் பதக்கமாகும். அதிலும், டோக்கியோ பாராலிம்பிக்கில் தான் பாட்மிண்டன் போட்டி முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் சாம்பியனாகி வரலாறு படைத்திருக்கிறார் பிரமோத். பாட்மிண்டனில் மேலும் இரு இந்தியர்கள் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளதால், அதில் இந்தியாவுக்கு இன்னும் இரு பதக்கங்கள் உறுதியாகியுள்ளன.

**பாராட்டு:** பதக்கம் வென்றுள்ள மணீஷ், சிங்ராஜ், பிரமோத், மனோஜ் ஆகியோருக்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளும், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

# 12 உயர் நீதிமன்றங்களுக்கு 68 புதிய நீதிபதிகள் நியமனம்

## ● மத்திய அரசுக்கு கொலிஜியம் குழு பரிந்துரை

**புதுடெல்லி**

நாடு முழுவதும் 12 உயர் நீதிமன்றங்களில் 68 புதிய நீதிபதிகளை நியமிக்க உச்ச நீதிமன்றத்தின் கொலிஜியம் குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா, நீதிபதிகள் யு.யு.லலித், ஏ.எம்.கான்வில்கர் அடங்கிய கொலிஜியம் குழு கடந்த ஆகஸ்ட் 24, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் கூடியது. அப்போது நாடு முழுவதும் பல்வேறு உயர் நீதிமன்றங்களில் புதிய நீதிபதிகளை நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்த கூட்டங்களில் 112 பேரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இதில் இருந்து 68 பேர் தேர்வு செய்யப்பட்டனர். சென்னை, கொல்கத்தா உட்பட 12 உயர் நீதிமன்றங்களில் இவர்களை புதிய நீதிபதிகளாக நியமிக்க மத்திய அரசுக்கு கொலிஜியம் குழு பரிந்துரை செய்திருக்கிறது. 68 பேரில் 44 பேர் வழக்கறிஞர்கள். 24 பேர் நீதிபதிகள் ஆவர். பரிந்துரை பட்டியலில் மொத்தம் 11 பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 4 புதிய நீதிபதிகளை நியமிக்க கொலிஜியம் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இதன்படி மூத்த வழக்கறிஞர்கள் சுந்தரம் ஸ்ரீமதி, பரத சக்கரவர்த்தி, விஜய குமார், முகமது ஷபிக் ஆகியோரின் பெயர்கள் மத்திய சட்ட அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அலகாபாத் உயர் நீதிமன்றம் 16 பேர், கொல்கத்தா உயர் நீதிமன்றம் 10 பேர், சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம் 2 பேர், குவாஹாட்டி உயர் நீதிமன்றம் 5 பேர், ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்றம் 4 பேர், ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் 2 பேர், கேரள உயர் நீதிமன்றம் 8 பேர், மத்திய பிரதேச உயர் நீதிமன்றம் ஒருவர், பஞ்சாப்-ஹரியாணா உயர் நீதிமன்றம் 4 பேர், ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் 7 பேரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

# பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான வரி ரத்து

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, செப். 4:** பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவீத வரி ரத்து செய்யப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் விதி 110-இன் கீழ் அவர் சனிக்கிழமை படித்தளித்த அறிக்கை:

இந்தியத் துணித் தொழில் வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு துணித் தொழில் வகிக்கிறது. மாநிலத்திலுள்ள 1,570 நூற்பாலைகளின் மூலமாக நூற்கப்படும் நூலின் அளவு, நாட்டின் மொத்த நூற்புத் திறனில் 45 சதவீதமாகும். மாநிலத்தில் நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவில் 95 சதவீதம் பிற மாநிலங்களில் இருந்து தருவிக்கப்படுகிறது.

**ஒரு சதவீதம் வரி:** தமிழ்நாடு வேளாண் பொருள்கள் விற்பனைச் சட்டத்தின்படி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின் விற்பனை மதிப்பு மீது சந்தை நுழைவு வரியாக ஒரு சதவீதம் விதிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி, பருத்திப் பொதி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு ஆகியன வேளாண் பொருள்களாகக் கருதப்படுகின்றன. இந்தப் பொருள்களை சந்தைப் பகுதியில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யும் போது ஒரு சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.

சந்தை நுழைவு வரி என்பது, பருத்திப் பொதிகள் மீது மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மாறாக, பஞ்சு, கழிவுப் பஞ்சு போன்ற உற்பத்திப் பொருள்கள் மீது ஒரு சதவீதம் சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது.

**நெருக்கடிகளை எதிர்கொள்ளுதல்:** வெளி மாநிலங்களில் இருந்து பஞ்சு கொள்முதல் செய்யப்படும் போது, குறு, சிறு நூற்பாலைகள் போக்குவரத்துக் கட்டணம் செலுத்துவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பஞ்சின் மீது விதிக்கப்படும் சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டுமென்பது தொழில் முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

திமுக அரசு பொறுப்பேற்றதும், நெசவாளர்களுடன் நடந்த கருத்துக் கேட்புக் கூட்டங்களில் சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இதைக் கருத்தில் கொண்டு தொழில்முனைவோர், நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவீத வரி ரத்து செய்யப்படுகிறது. இதற்கான உரிய சட்டத் திருத்தம் இந்தப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.



பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான வரி ரத்து செய்யப்படும் என்று சட்டப்பேரவையில் சனிக்கிழமை அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்.

## தொழில் அமைப்புகள் வரவேற்பு

**கோவை/ திருப்பூர், செப். 4:** பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவீத வேளாண் சந்தை வரியை தமிழ்நாடு அரசு நீக்கியிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு என்று கோவை, திருப்பூரைச் சேர்ந்த ஜவுளித் தொழில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக, இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பின் தலைவர் டி.ராஜ்குமார், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் (சைமா) துணைத் தலைவர் ரவி சாம் ஆகியோர் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:

பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவீத வேளாண் சந்தை வரியை தமிழ்நாடு அரசு நீக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இது தமிழக அளவில் மட்டுமின்றி, இந்திய அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க கொள்கை முடிவாகும். இது தமிழகத்தில் உள்ள பருத்தி விவசாயிகளுக்கு உடனடியாகப் பலனளிக்கும்.

தமிழக அரசு வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் பருத்தி உற்பத்தியை 5 லட்சம் பேல்களில் இருந்து 25 லட்சம் பேல்களாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருக்கும் நிலையில், சுமார் 10 லட்சம் பருத்தி விவசாயிகள் வரை பயனடைவார்கள். இதனால் மாநிலத்தின் ஜிஎஸ்டி வசூல் பல மடங்கு உயரும்.

இந்த வரி நீக்கத்தால் இந்திய பருத்திக் கழகமும், தனியார் விற்பனையாளர்களும் தமிழ்நாட்டில் பஞ்சை இருப்பு வைத்து அன்றாடம் குறு, சிறு நூற்பாலைகளுக்கு விற்பனை செய்ய முன்வருவார்கள் என்றனர்.

இந்த அறிவிப்பை இந்தியன் டெக்ஸ்பிரனர்ஸ் கூட்டமைப்பு, தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) வரவேற்றுள்ளன.

**ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (ஏஇபிசி) வரவேற்பு:** தமிழக முதல்வருக்கு ஏஇபிசி தலைவர் ஏ.சக்திவேல் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

தொழில் துறையினரின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, தமிழகத்துக்கு கொண்டு வரப்படும் பஞ்சுக்கான ஒரு சதவீத நுழைவு வரியை ரத்து செய்வதாக அறிவித்துள்ளதற்கு நன்றி. இதனால், விவசாயிகள், கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள், ஆடை உற்பத்தியாளர்கள், பஞ்சு மறுசுழற்சி செய்வோர் பயனடைவர்.

# மெரீனா கடற்கரையில் படகு சவாரி ஹெலிகாப்டர் சுற்றுலாவுக்கு ₹1 கோடி

**சென்னை, செப். 5:** பேரவையில் சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:

- மதுரை, கொடைக்கானல், ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க ₹1 கோடியில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டில் 10 இடங்களில் தேர்வு செய்து சாகச சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் திறந்தவெளி முகாம்கள் ஏற்படுத்தப்படும்.
- முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதல்முறையாக மிதவை படகுடன் கூடிய உணவகம் அமைக்கப்படும்.
- சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான குழு அமைக்கப்படும்.
- கடற்கரைகளுக்கு Blue flag அங்கீகாரத்தினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- தமிழ்நாட்டில் மருத்துவ சுற்றுலா பல்வேறு சுற்றுலா தொழில் பங்குதாரர்ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்படும்.
- மெரினா கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் ராயல் மெட்ராஸ் யாட் கிளப் இணைந்து பொழுதுபோக்கு படகு சவாரி தொடங்கப்படும்.



# உலக அழகிப் போட்டியின் வரலாறு

உலகக் கோப்பை கிரிக்கெட், உலகக் கோப்பை கால்பந்து போல, உலக அழகிப் போட்டியும் சிறப்பு வாய்ந்தது. அழகிப்போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்ற பெண்களின் லட்சியம், உலக அழகிப் போட்டியில் வெற்றி பெறுவதாகத்தான் இருக்கும். இந்தப் போட்டியின் வரலாறு குறித்து தெரிந்து கொள்வோம்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில், ஆண்டுதோறும் 'பிரிட்டன் திருவிழா' நடக்கும். அந்த விழாவில், உலகின் பல பகுதிகளில் இருந்தும் இளம் பெண்கள் பங்கேற்பார்கள். அப்போது, சிறப்பாக தயாரிக்கப்படும் 'பிகினி' எனும் நீச்சல் உடைகளை அறிமுகப்படுத்தும் வகையில், போட்டி கள் நடத்தப்பட்டன. இதில், நீச்சல் உடை கச்சிதமாக பொருந்தியிருக்கும் அழகியைத் தேர்வு செய்து பரிசுகள் வழங்கினார்கள்.

இப்படி நடந்த விழா, அழகிப் போட்டியாக மாறுவதற்கு, 1951-ம் ஆண்டு எரிக் மோர்லி என்பவர் அடித்தளமிட்டார். அவரது மறைவுக்குப் பின்பு, அவர் மனைவி ஜூலியா மோர்லே அடுத்த தலைவராக பொறுப்பேற்றார். அப்போதிலிருந்து இந்த விழா, உலக அழகிப் போட்டியாக ஆண்டு தோறும் நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியை ஊடகங்கள் அனைத்தும் பிரபலமாக்க தொடங்கியதால் மேலும் விமரிசையாக நடத்தத் தொடங்கினார்கள்.

1959-ம் ஆண்டு முதல் உலக அழகிப் போட்டியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பத் தொடங்கினார்கள். நீச்சல் உடைகளில் போட்டியில் பங்கேற்பதற்கு எதிர்ப்பு எழுந்ததால், 1976-ம் ஆண்டிலிருந்து நீண்ட 'கவுன்' அணிந்து போட்டியில் பங்கேற்க அறிவுறுத்தப் பட்டது.

போட்டியின் ஆரம்ப காலங்களில் அழகை வைத்து மட்டுமே, உலக அழகியைத் தேர்வு செய்தனர். அழகிக்கு திறமையும் இருக்க வேண்டும் எனக்கருதி அறிவுத்திறன், ஆளுமை போட்டிகளை சேர்த்தனர். தற்போது, இந்தப் போட்டியில் பங்கேற்பவர்கள் அழகில் மட்டுமில்லாமல், மற்ற இரு போட்டிகளிலும் வெற்றிபெற வேண்டும்.

போட்டியாளர்களின் வயது, எடை, உடை, உடல் அங்கங்களின் அளவு, நடை என, அனைத்தையும் கண்காணித்து மதிப்பெண்கள் வழங்குவார்கள். திருமணமான பெண்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது. போட்டியில், பங்கேற்கும் அழகிகளுக்கு 17 வயது முதல் 23 வயது வரை இருக்க வேண்டும். ஒரு நாட்டில் இருந்து, ஒரு போட்டியாளர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

70 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் உலக அழகிப் போட்டியில், இந்தியா, வெனிசுலா நாடுகளைச் சேர்ந்த அழகிகள்தான் அதிகமாக மகுடம் சூடி யுள்ளனர். ரெய்தா பரியா, ஐஸ்வர்யா ராய் பச்சன், டயானா ஹைடன், யுக்தா முகி, பிரியங்கா சோப்ரா, மானுஷி சில்லார் போன்றோர் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உலக அழகியாகத் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு, ஒரு லட்சம் பவுண்ட் பரிசு தொகையாக வழங்கப்படும்.

உலக அழகிகளுக்கு சூட்டப்படும் வைரக்கிரீடம் முதன் முதலில் 1955-ம் ஆண்டு, அப்போட்டியில் வெற்றி பெற்ற வெனீசுலா நாட்டு அழகி, சுஸானா டைஜிக்கு அணிவிக்கப்பட்டது.

இந்த கிரீடத்தில், சிறியதும், பெரியதுமாக 1,770 நீல நிற வைர கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். 18 கேரட் தங்கம் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

# வ.உ.சி. வாழ்க்கைக் குறிப்புகள்

**1872**

**வ.உ. சிதம்பரனார் பிறப்பு**
**செப்டம்பர் – 5**
**பிறந்த ஊர்: ஒட்டப்பிடாரம்**
**பெற்றோர்: உலகநாதர், பரமாயி**

**1893**

- திலகரின் அரசியல் இயக்கத்தால் ஈர்க்கப்பெறுதல்...

**1894**

- வழக்கறிஞர் (பிளீடர்) தேர்வில் வென்று வழக்கறிஞரானமை...

**1895**

திருமணம்

**1898**

- வ.உ.சி.யின் முதல் அரசியல் சொற்பொழிவு;
  நிகழ்த்தப்பெற்ற இடம்: ஒட்டப்பிடாரம்

**1900**

- தூத்துக்குடி வழ்க்கை
- வழக்கறிஞராகப் பணியாற்ற தொடங்கிய வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் ஆன்மிக இதழ் ஒன்றைத் தொடங்க விரும்பி ஆகஸ்டு மாதத்தில் அறிக்கை வெளியிடுதல்.
- வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் வெளிக்கொணர விரும்பிய ஆன்மிக இதழ் 'விவேகபாநு' என்ற பெயரில் கணபதியானந்த சுவாமிகள் என்பவரை ஆசிரியராகக் கொண்டு செப்டம்பரில் குற்றாலம் அகத்தியர் ஆசிரமத்தில் இருந்து வெளிவந்தது.
- வ.உ.சி.யின் முதல் கட்டுரையான 'கடவுளும் பக்தியும்' இவ்விதழில் வெளியானது.

**1901**

- வ.உ.சி.யின் துணைவியார் வள்ளியம்மையின் மறைவு.

**1904**

- வ.உ.சி.யின் முதல் இலக்கியச் சொற்பொழிவு
  தலைப்பு: திருக்குறள் – ஒழுக்கமுடைமை
  இடம்: தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை.

**1905**

- மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களுள் வ.உ.சி.யைப் பெரிதும் ஈர்த்தவரான ஜேம்ஸ் ஆலனின் நூல்களைப் படிக்கத் தொடங்கியமையும் அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க விரும்பியமையும்...

**1906**

- வ.உ.சி.யின் முதல் அரசியல் கட்டுரை வெளிவருதல்...
  தலைப்பு: 'சுதேசாபிமானம்'
  இதழ்: மதுரை விவேகபாநு, பிப்ரவரி –1906
- வ.உ.சி. பாரதி முதல் சந்திப்பு
  இடம்: 'இந்தியா' பத்திரிகை அலுவலகம், சென்னை.
- ராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரும் சென்னை ராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவருமான ராமகிருஷ்ணானந்தரை வ.உ.சி. சந்தித்தமை...
- ராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான அபேதானந்தர் அமெரிக்கா முதலிய நாடுகளில் தம் ஆன்மிகப் பணிகளை முடித்துக் கொண்டு இலங்கை வழியாக இந்தியா திரும்பியபோது தூத்துக்குடி துறைமுகத்தில் அவரை எதிர்கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க வரவேற்பு அளித்தமை...
- 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷம் கம்பெனி' என்ற பெயரில் சுதேசிக் கப்பல் நிறுவனம் அக்டோபரில் முறையாகப் பதிவு செய்யப்படுதல்...

**1907**

- சுதேசிக் கப்பல் கம்பெனிக்காக 'எஸ்.எஸ்.காலியோ', 'லாவோ' என்னும் இரு கப்பல்களை இயக்கியமை...
- விடுதலை இயக்க வரலாறு பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய சூரத் காங்கிரச மாநாடு நடந்தமை. காங்கிரசில் தீவிரவாத இயக்கம் உருவானமை வ.உ.சி. தீவிரவாத இயக்கத்தின் முதல்நிலைத் தலைவர்களுள் ஒருவராதல்...

**1908**

- வ.உ.சி. – சுப்பிரமணிய சிவா முதல் சந்திப்பு – 3.2.1908–இல் சிவா தூத்துக்குடியில் வ.உ.சி.யைச் சந்தித்தமை...
- தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு முதலிய காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்தமை...
- வேலைநிறுத்தம் வ.உ.சி.யின் வழிகாட்டுதலில் நடந்தமை...

**12.3.1908**

- வ.உ.சி. கைது செய்யப்பெற்று விசாரணைக் கைதியாகப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்படுதல்...

**13.3.1908**

- வ.உ.சி. கைது செய்யப்பெற்றதை எதிர்த்து உருவான மக்கள் எழுச்சியும் போராட்டமும்...



**7.7.1908**

- இரட்டை ஆயுள் தண்டனை நாற்பது ஆண்டுகள் வழங்கப் பெற்றமை...

**9.7.1908**

- வ.உ.சி.யின் கோவைச் சிறை வாழ்க்கையின் தொடக்கம் – சிறையில் வ.உ.சி. செக்கிழுத்தமை; ஜேம்ஸ் ஆலனின் As a Man Thinketh என்னும் ஆங்கில நூலை 'மனம் போல வாழ்வு' என்ற பெயரில் மொழிபெயர்த்தமை...

**1909**

- வ.உ.சி.யின் முதல் நூலான 'மனம் போல வாழ்வு' அவர் நண்பர் சுவாமி வள்ளிநாயகத்தால் சென்னையில் வெளியிடப்பெற்றமை...

**1912**

- வ.உ.சி.யின் விடுதலை – 24.12.1912

**1914**

- ஜேம்ஸ் ஆலனின் Out from the heart 'அகமே புறம்' என்ற பெயரில் வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பில் வெளிவந்தமை (கோவைச் சிறையில் எழுதப் பெற்றது)...

**1915**

- 'மெய்யறிவு' வெளிவருதல் (கண்ணனூர்ச் சிறையில் எழுதியது), 'பாடல் திரட்டு' வெளிவந்தமை (வ.உ.சி. எழுதிய தனிப் பாடல்களின் தொகுப்பு)...

**1916**

- ஜேம்ஸ் ஆலனின் From Poverty To Power என்னும் ஆங்கில நூலின் முதல் பகுதியாகிய The Path of Prosperity 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயரில் வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பாக வெளிவருதல்...

**1917**

- திருக்குறள் – மணிக்குடவர் உரை – அறத்துப்பால் வ.உ.சி.யின் பதிப்பாக வெளிவருதல்...
- 'இன்னிலை' – வ.உ.சி. உரையுடன் வெளிவருதல்...

**1927**

- 'எனது அரசியல் பெருஞ்சொல்' (அரசியல் மாநாட்டுத் தலைமைப் பொழிவு) நூலாக்கம் பெற்றமை...

**1928**

- தொல்காப்பியம் – இளம்பூரணம் – பொருளதிகாரம் – அகத்திணையியல், புறத்திணையியல் – இரண்டாம் பதிப்பு வெளிவருதல் (இதன் முதல் பதிப்பு 1920இல் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது) தொல்காப்பியம் – இளம் பூரணம் – எழுத்ததிகாரம் வெளிவருதல்...

**1933**

- இலங்கை 'வீரகேசரி' இதழில் திலகரின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்குதல்...

**1934**

- ஜேம்ஸ் ஆலனின் From Poverty To Power என்னும் ஆங்கில நூலின் இரண்டாவது பகுதியாகிய The Way of Peace என்பது 'சாந்திக்கு மார்க்கம்' என்ற பெயரில் மொழிபெயர்ப்பாக வருதல்...

**1935**

- திருக்குறள் – அறத்துப்பால் – வ.உ.சி. உரை வெளியீடு...
- சிவஞானபோதம் – வ.உ.சி. உரை வெளிவருதல்...

**1936**

- தொல்காப்பியம் – இளம்பூரணம் – பொருளதிகாரம் (முழுமையாக) வ.உ.சி. எஸ். வையாபுரிப் பிள்ளை பெயரில் வெளிவருதல்...

**18.11.1936**

வ.உ.சி.யின் பெருவாழ்வின் நிறைவு.

‘கப்பலோட்டிய தமிழன்’, ‘செக்கிழுத்த செம்மல்’ என்று போற்றப்படுபவர் சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரம். அவர் பிறந்த நூற்றாண்டு இன்று தொடங்குகிறது.

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் 1872 செப்டம்பர் 5 பிறந்தவர். தாத்தா, பாட்டியிடம் ராமாயண, சிவபுராணக் கதைகளைக் கேட்டு வளர்ந்தார். வீரப் பெருமாள் அண்ணாவி என்பவரிடம் தமிழும், அரசாங்க அலுவலர் கிருஷ்ணனிடம் ஆங்கிலமும் கற்றார்.

தூத்துக்குடி புனித சேவியர் பள்ளி, கால்டுவெல் பள்ளி, திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் பயின்றார். தாலுகா அலுவலகத்தில் பணியாற்றினார். தன் தந்தையைப் போலவே சட்டக் கல்வி முடித்து, ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

குற்றவியல் வழக்குகளில் கைதேர்ந்தவர். வசதியற்றவர்களுக்காக இலவசமாக வாதாடினார். தவறாகக் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்து, காவல்துறையினரின் கோபத்துக்கு ஆளானார். இதனால், அவரை தூத்துக்குடிக்கு அனுப்பிவைத்தார் தந்தை உலகநாதன்.

தமிழ் இலக்கியங்கள் குறித்து பல செய்யுள்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். பல ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார். சிவஞான போதம் நூலுக்கு வேதாந்த அடிப்படையில் உரை எழுதினார். ராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடி சீடரான ராமகிருஷ்ணானந்தரை இவர் சந்தித்தது திருப்புமுனையாக அமைந்தது. சுதேசி எண்ணங்கள் குறித்த அவரது கருத்துகள் இவருக்குள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

தூத்துக்குடி கைத்தொழில் சங்கம், தரும சங்க நெசவு சாலை, சுதேசிய பண்டக சாலை, வேளாண் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளைத் தொடங்கினார். வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தார். திலகரை அரசியல் குருவாக ஏற்று, விடுதலைப் போராட்டத்தில் இறங்கினார். பிரிட்டிஷாரின் கப்பல் நிறுவனத்துக்கு எதிராக ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ என்ற கப்பல் நிறுவனத்தை தூத்துக்குடியில் தொடங்கினார்.

கொழும்பு சென்று ஒரு கப்பலை வாடகைக்கு ஒப்பந்தம் செய்து போக்குவரத்தைத் தொடங்கினார். ஆனாலும் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. சொந்தக் கப்பல் வாங்க பங்குதாரர்களைத் திரட்ட வட மாநிலங்களுக்கு சென்றார். எஸ்.எஸ்.காலியோ, எஸ்.எஸ். லாவோ ஆகிய கப்பல்களுடன் திரும்பினார். தூத்துக்குடி – கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தைத் தொடங்கினார்.

பாரதியாரின் நெருங்கிய நண்பராக இருந்தார். தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்க, சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து போராடினார். தூத்துக்குடி கோரல் மில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தாராளமாக நிதியுதவி வழங்கியதால், தனது சொத்தில் பெரும் பகுதியை இழந்தார். இதுவே இந்தியாவின் முதல் அரசியல் வேலைநிறுத்தம். இவரது உணர்ச்சிமிக்க உரைகள், மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை கொழுந்துவிட்டு எரியச் செய்தன. 1908–ல் பொய்க் குற்றம்சாட்டி ஆங்கில அரசு இவரைக் கைது செய்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலம் முழுவதும் பல இடங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.



▲ சிறையில் தண்டனையாக வ.உ.சி. எண்ணெய்ச் செக்கு இழுக்க வைக்கப்பட்டார். அவர் இழுத்த செக்கு, சென்னை காந்தி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பின்னர், தேச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டார். அதனால் நீதிமன்றங்களில் வாதாடும் உரிமை மறுக்கப்பட்டு வழக்கறிஞர் உரிமம் பறிக்கப்பட்டது. கோவை சிறையில் செக்கு இழுக்கவைத்து சித்ரவதைச் செய்யப்பட்டார். அதன் காரணமாகவே ‘செக்கிழுத்த செம்மல்’ என அழைக்கப்படுகிறார். மேல் முறையீட்டால் தண்டனை குறைக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்குப் பின் விடுதலையானார். பிறகு சென்னையில் குடியேறினார்.

நாட்டின் விடுதலைக்காகத் தொழில், சொத்து, சுகம், வாழ்க்கை என அனைத்தையும் தியாகம் செய்த வ.உ.சிதம்பரம் 64–வது வயதில் (1936) மறைந்தார். குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளமாக தன்னைக் குறுக்கிக்கொள்ளாமல் சாதி, மத எல்லைகளைக் கடந்த முன்னணி தமிழக விடுதலைப் போராட்ட வீரராக அவர் திகழ்ந்தார்.



Share Certificate

▲ சுதேசி நாவாய் சங்க கப்பல் நிறுவனத்தின் பங்கு பத்திரம்



▲ 1961இல் வெளியான ‘கப்பலோட்டிய தமிழன்’ திரைப்படத்தில் ‘சிவாஜி’ கணேசன்.

## தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில்

# 14 ஆண்டுகளில் பட்டப் படிப்பு முடித்த 209 கைதிகள்

## ● 925 பேர் சான்றிதழ் படிப்புகளை முடித்து அசத்தல்

மனோஜ் முத்தரசு

■ சென்னை

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மூலமாக கடந்த 14 ஆண்டுகளில் 209 கைதிகள் பட்டப் படிப்பையும், 925 பேர் சான்றிதழ் படிப்புகளையும் முடித்துள்ளனர்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 81 பட்டப் படிப்புகள், 21 திறன் மேம்பாட்டுப் படிப்புகள் ஆகிய 130 கல்விசார் பாடவகைப் பிரிவுகளை தொலை தூரக் கல்வி அடிப்படையில் வழங்கி வருகிறது.

குறிப்பாக, சென்னை, கோவை, கடலூர், மதுரை, பாளையங்கோட்டை, புதுக்கோட்டை (மாவட்ட சிறை), சேலம், திருச்சி, வேலூர் ஆகிய 9 மத்திய சிறைச்சாலைகளில் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி மையங்கள் மூலம் கடந்த 2007 முதல் பட்டப் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன.

அதேபோல, 9 சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில், மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி கடந்த 2010-ல் தொடங்கப்பட்டது. இதில் தொழிற் கல்வி, பட்டயப் படிப்புகள் உள்ளிட்ட சான்றிதழ் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றைப் படிப்பதற்கு எந்த வயது உச்சவரம்பும் கிடையாது.

இந்நிலையில், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் 'இந்து தமிழ்' நாளிதழுக்கு வழங்கிய புள்ளிவிவரங்களின்படி, 2007-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டுவரை இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளில் 6 பெண்கள் உட்பட 609 கைதிகள் சேர்ந்துள்ளனர்.

அதிகபட்சமாக திருச்சி மத்தியச் சிறையில் 151 பேரும், அதற்கு அடுத்தபடியாக சென்னை மத்திய சிறையில் 130 பேரும், கடலூர் சிறையில் 116 பேரும், கோவை சிறையில் 77 பேரும் சேர்ந்துள்ளனர்.

அதேபோல, புதுக்கோட்டை சிறையில் இதுவரை 5 பேரும், வேலூரில் 19 பேரும், பாளையங்கோட்டையில் 55 பேரும், மதுரை சிறையில் 56 பேரும் சேர்ந்துள்ளனர்.

அதன்படி, பட்டப் படிப்புகளில் சேர்ந்து படித்த கைதிகளில் இது வரை எம்பிஏ படிப்பில் 6 பேரும், எம்சிஏ படிப்பில் ஒரு கைதியும் பட்டம் பெற்றுள்ளனர். இதர முதுநிலை பட்டப் படிப்புகளில் 46 பேரும், இளநிலை பட்டப் படிப்புகளில் 4 பெண்கள் உட்பட 156 பேரும் பட்டம் பெற்றுள்ளனர். அதன்படி, மொத்தம் 209 கைதிகள் பட்டதாரிகளாகியுள்ளனர்.

மேலும், மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி மூலமாக 65 பெண்கள் உட்பட 765 பேர் பட்டயப் படிப்புகளையும், 160 ஆண் கைதிகள் தொழிற்பயிற்சி பட்டப்படிப்பையும் சேர்த்து மொத்தம் 925 பேர் சான்றிதழ் படிப்புகளை முடித்து அசத்தி உள்ளனர்.

எனினும், 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆகிய நான்கு ஆண்டுகளில் சென்னையில் 11 பேர், கோவையில் 11 பேர், மதுரையில் 8 பேர் என மொத்தம் 30 கைதிகள் மட்டுமே பட்டப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர். ஆனால், 2007-ம் ஆண்டு முதல் தற்போதுவரை சேலம் சிறையிலிருந்து இதுவரை ஒரு கைதிகூட பட்டப் படிப்பில் சேரவில்லை.

இதுகுறித்து சிறைத் துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, "சிறையில் அன்றாடப் பணிகளைச் செய்து ரூ.150 முதல் ரூ.300 வரை சம்பளம் பெறும் கைதிகளால் பட்டப் படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகளைத் தொடருவது கடினமாக உள்ளது. சில கைதிகளுக்கு அவரது உறவினர்கள் வெளியே இருந்து பண உதவி செய்கிறார்கள். அதனால், அவர்களால் படிக்க முடிகிறது. ஆனால், கல்வி மீது ஆர்வமுள்ள சில கைதிகளுக்குக் கட்டணம் செலுத்தி உதவ உறவினர்கள் யாரும் இல்லை. சிறைக் கைதிகளுக்குக் கல்விக் கட்டணம் மிகப்பெரிய தடையாக இருக்கிறது" என்றார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர் கோ.பார்த்தசாரதி கூறும்போது, "சிறைக் கைதிகளின் மனதை கல்வியின் பக்கம் திருப்பும் நோக்கில் நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில்தான் சிறைகளில் பட்டப் படிப்பு படிக்கும் வசதியை, திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொடங்கியது. 50 சதவீத கல்விக் கட்டண தளர்வுகள் கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

அதேபோல, கரோனா கால கட்டத்தில் தேர்வுக் கட்டணம் செலுத்தச் சிறைவாசிகள் மிகவும் சிரமம் அடைந்தனர். இதனால், தேர்வுக் கட்டணத்திலிருந்து கைதிகளுக்கு விலக்கு வழங்கப்பட்டது. கைதிகளுக்கு இலவச கல்வி வழங்க சாத்தியம் இருக்கிறதா என்ற கோணத்திலும் நாங்கள் ஆலோசனை செய்து வருகிறோம். சிறையிலிருந்து சலுகை மூலம் கல்வியிலும் கைதி, விடுதலையான பின்னரும் அதே சலுகையுடன் தனது படிப்பைத் தொடர முடியும். இது இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத சிறப்பு அம்சமாகும்.

சிறையிலிருந்து பட்டம் அல்லது சான்றிதழ் படிப்பு முடித்து வெளியே வரும்போது, சமுதாயத்தில் அவர்களுக்கென தனி அங்கீகாரம் கிடைக்கும். கல்விக் கட்டணத்துக்கு உதவ பொதுமக்கள் முன்வர வேண்டும்" என்றார்.

### 14 ஆயிரம் கைதிகள்

2021-ம் ஆண்டு மே மாத புள்ளிவிவரங்களின்படி, தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் 13 ஆயிரத்து 985 ஆண்கள், 611 பெண்கள் என மொத்தம் 14 ஆயிரத்து 596 கைதிகள் உள்ளனர்.

# ஆளில்லா போர் விமானம் தயாரிக்கும் ஒப்பந்தம்

## இந்தியா மற்றும் அமெரிக்கா கையெழுத்து

புது தில்லி, செப்.4

ஆளில்லா போர் விமானம் தயாரிக்கும், திட்ட ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா பாதுகாப்புத்துறைகள் கையெழுத்திட்டுள்ளன. பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் நடவடிக்கையில் வான் பாதுகாப்பு அமைப்பு கூட்டு செயற் குழு திட்டத்தின் கீழ், இந்த ஒப்பந்தம், கடந்த ஜூலை 30ம் தேதி கையெழுத்தானது. பாதுகாப்பு உபகரணத்தை கூட்டாக உருவாக்குவதன் மூலம் இரு நாடுகள் இடையேயான பாதுகாப்பு தொழில்நுட்ப கூட்டுறவை, வலுப்படுத்துவதில் இந்த ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை.

டிடிடிஐ திட்டத்தின் கீழ், நிலம், கடல், வான் மற்றும் விமானம் தாங்கி போர்க்கப்பல்களுக்கான தொழில்நுட்பங்கள், பரஸ்பர ஒப்பந்த திட்டங்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆளில்லா போர் விமானத்தை இணைந்து தயாரிப்பதற்கான திட்ட ஒப்பந்தம் டிடிடிஐ திட்டத்தில் மிக முக்கியமான சாதனை ஆகும். இந்த திட்ட ஒப்பந்தம், ஆளில்லா போர் விமானத்தின் மாதிரியை இணைந்து உருவாக்குவதில், இந்திய விமானப்படை ஆய்வு கூடம், ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்(டிஆர்டிஓ) ஆகியவை வடிவமைப்பு, உருவாக்கம், செய்முறை விளக்கம், பரிசோதனையில் கூட்டாக செயல்படுத்துதை சுட்டிக் காட்டுகிறது.

இந்த திட்ட ஒப்பந்தத்தை செயல்படுத்தியதில், டிஆர்டிஓ-வின் ஏரோ நாடிக்கல் வளர்ச்சி மையம் விமானப்படை ஆய்வு மையத் தில் உள்ள ஏரோஸ்பேஸ் சிஸ்டம்ஸ் இயக்குனரகம், இந்தியா மற்றும் அமெரிக்க விமானப்படைகள் ஆகியவை முக்கிய அமைப் புகளாக உள்ளன. டிடிடிஐ திட்டத்தின் கீழ் வான்பாதுகாப்பு அமைப்பு கூட்டு செயற்குழுவின் துணைத் தலைவர்களாக உள்ள இந்திய விமானப் படை திட்டங்களுக்கான துணை தளபதி ஏர் வைஸ் மார்ல் நர்மதேஸ் வர் திவாரி, அமெரிக்க விமானப்படையின், விமானப்படை பாது காப்பு உதவி மற்றும் ஒத்துழைப்பு இயக்குனரகத்தின் இயக்குனர் பிரிகேடியர் ஜெனரல் பிரைன் ஆர்.ப்ரூக்பயூர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# தினம் ஒரு தகவல்

# மெத்தலோ பாக்டீரியா என்னும் திரவ நுண்ணுயிர் உரம்

இலைகளின் மேற்புறத்திலும், உட்புறத்திலும் வாழும் பாக்டீரியாக்களை மெத்தைலோ பாக்டீரியா என்றழைக்கப்படுகிறது. நன்மை செய்யும் பாக்டீரியாக்களில் இது மிக முக்கியமானது. இப்பாக்டீரியா செடிகளின் இலைப்பரப்பிலும், வேர் மண்டலத்திலும் காற்று, தண்ணீர், மண், கல் அனைத்து இடங்களிலும் (காற்று போகாத இடங்கள் தவிர) காணப்படுகிறது. மெத்தைலோ பாக்டீரியா செடிகளுக்கு பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகைனின் ஆக்ஸின்களை அளிப்பதன் மூலம் செடிகள் நன்கு வளர்ச்சியடைகின்றன. விதைகளை விதைப்பதற்கு முன்பாக விதைகளின் கடினத் தன்மையைப் பொறுத்து நுண்ணுயிர் திரவ கரைசலில் 5 முதல் 15 நிமிடம் நன்கு ஊறவைத்து பின்பு நிழலில் 15 நிமிடம் உலர வைத்து நடுவதன் மூலம் விதைகளின் முளைப்புத்திறன் நாற்றுக்களின் வீரியம் மற்றும் வளர்ச்சி அதிகரிக்கிறது.

மேலும் விதைகளின் முளைப்புக் காலம் ஒன்று முதல் இரண்டு நாட்கள் குறைக்கப்படுகிறது. திரவ நுண்ணுயிர் உரத்தை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம், பயிர்களின் வளர்ச்சி, வளர்ச்சி காலம், பூக்கும் காலம், காய்க்கும் காலம் 5 முதல் 7 நாட்கள் வரை குறைக்கப்படுகிறது.

மேலும் காய்கள், பூக்கள், பழங்களின் நிறம், திடம், பருமன் அதிகரிக்கிறது.

தொடரும்...

# தேனீக்கள் - ஒரு பார்வை

தேனீக்கள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவை. தேனீயின் மூலம் தேன், தேன் மெழுகு, தேன் பிசின் போன்ற பொருட்கள், தேனீ வளர்ப்பு மூலம் கிடைப்பதோடு மட்டுமின்றி அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் பயிர்களின் மகசூல் அதிகரிக்க உதவுகிறது. உழவுக்கு உறுதுணையாக உதவும் தேவதைகள் எனத் தேனீக்களை வர்ணிக்கப்படுகிறது சரியானதாகும்.

### தேனீக்கள் கூட்டில் மூவகை தேனீக்கள் உள்ளன

#### 1. இராணித் தேனீ :

கூட்டில் ஒன்று மட்டும் இருக்கும். இது முழு வளர்ச்சி அடைந்த தேனீ, செந்நிறமாக உருவத்தில் பெரியது. கொடுக்கு இருப்பதால் கொட்டு தன்மை கொண்டது. இது ராயல் ஜெல்லி என்ற திரவ உணவை சுரக்கும் தன்மை கொண்டது. தேன்கூட்டை வழி நடத்தும்.

#### 2. ஆண் தேனீ :

இதை ட்ரோன் என்று அழைக்கப்படும். இனவிருத்தி மட்டுமே செய்யும் மற்ற எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறி போல இருக்கும். இதற்கு கொடுக்கு கிடையாது. மொத்த எண்ணிக்கையில் 10 சதவீகிதம் இருக்கும். வாழ்நாள் 1 முதல் 2 மாதங்களே, நடுத்தர உருவம் கொண்டது. நிறம் கருப்பு.

**3. வேலைக்காரத் தேனீ :** இவை அனைத்தும் பெண் தேனீக்கள். வயதின் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக இவை பணிபுரியும். சிறிய அளவில் இருக்கும். கூட்டில் 90 சதவீகிதம் இருந்தாலும் கடுமையான உழைப்பாளிகள். இவை ஒரு முறை தேன் எடுக்க 40 முதல் 100 பூக்கள் வரை செல்லும். சுமார் 3/4 கி.மீ தூரத்தில் உள்ள வாசனையையும் அறியும். நீலம், பச்சை, செந்நீலம், மஞ்சள் கலரில் உள்ள பூக்களை பிடிக்கும். கருப்பு நிறம் பிடிக்காது.

தேனீக்களின் மொழி நடன மொழி. நடன அசைவுகள் மூலம், தேன் இருக்குமிடத்தை மற்ற தேனீக்களுக்கு காட்டுகிறது. இதன் வாழ் நாட்கள் இரண்டு மாதங்கள். தேனீக்களின் உணவு மலர் களிலிருந்து கிடைக்கும் மதுரமும் மகரந்தமே. எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த தேனீக்களை நாமும் வளர்த்து பயன் பெறுவோம். இயற்கையின் தேவதையை அழிவில் இருந்து காப்பாற்றுவோம்.

**தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர்,**




# பேம்-2 திட்டத்தை தமிழக அரசு கைவிட முடிவு

மத்திய அரசின் பேம்-2 திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்வதை தமிழக அரசு கைவிட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ரூ.35லட்சம் முதல் ரூ.55 லட்சம் வரை மானியம் என்று கூறப்பட்டிருந்த நிலையில் மானிய தொகைக்கும் பேருந்தின் விலைக்கும் மிகப்பெரிய அளவில் வித்தியாசம் இருப்பதாக தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை கேரளா, கர்நாடகா,தெலங்கானா மாநில அரசுகளும் கைவிட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# இதே நாளில் அன்று

## செப்., 5, 1872


வ.உ.சிதம்பரம்

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் 1872 செப்., 5ம் தேதி பிறந்தவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. பிரபல வழக்கறிஞராக பணியாற்றியவர், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். பல ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்தார். தமிழ் இலக்கியங்கள் குறித்து பல செய்யுள்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தூத்துக்குடி கைத்தொழில் சங்கம், தரும சங்க நெசவு சாலை, சுதேசிய பண்டக சாலை, வேளாண் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளை துவக்கினார். ஆங்கிலேயருக்கு எதிராக, 'சுதேசி நாவாய் சங்கம்' என்ற கப்பல் நிறுவனத்தை துவங்கினார். இதனால், 'கப்பலோட்டிய தமிழன்' என போற்றப்பட்டார்.

தொழிலாளர்களின் உரிமைகளை காக்க, சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து போராடினார். இவரை கைது செய்ததால், தமிழகம் முழுதும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஆங்கிலேய அரசு, கோவை சிறையில் செக்கு இழுக்க வைத்து, சித்திரவதை செய்தது. நாட்டின் விடுதலைக்காக சொத்து, சுகம் அனைத்தையும் இழந்தார். 1936 நவ., 18ம் தேதி தன் 64வது வயதில் காலமானார்.

தியாகி வ.உ.சி., பிறந்த தினம் இன்று!